மாதர் போதினி

No. 246 ஜூன் 1918 No. 6



JACOB'S LADDER

யாக்கோபின் ஏணி

‘இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல; இது வானத்தின் வாசல்’ என்று யாக்கோபு தன் கல் தலையணையில் நித்திரை செய்து விழித்தவுடன் சொன்னான். லூஸ் என்ற பெத்தேலில் யாக்கோபுக்குக் கிடைத்த இந்த தரிசனம் நமக்கும் கிடையாதாவென்று ஆசிக்கும் அநேகருண்டு. ‘தேவன் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்ல.’ அவரை உண்மையாய்த் தேடினால் கண்டடையலாம். நாம் தனித்துவிடப்படும்போதும், துன்பங்கள் நேரி

VOL. XXXIII.

டும்போதும், தேவன் நமக்கு எத்தனை அருமையும் அருகாமையுமா யிருக்கிறரென்று கண்டு, அவர் நம்மைப்பற்றி கொண்டிருக்கும் மேன்மையான நோக்கத்தை அறிந்துகொள்ளலாம். இக்கட்டுகள் நாம் அவரைத் தேடும்படி அனுப்பப்படும் ஏதுக்களென்று உணர வேண்டும்.

யாக்கோபின் கல் தலையணை ஓர் ஞாபகார்த்தமான அடையாள மாயிற்று. அவன் தனித்து நித்திரை செய்த வெளி தேவனுடைய வீடென்று அர்த்தங்கொள்ளும் பெத்தேல் ஆயிற்று. ஆண்டவர் நமக்குச் செய்யும் இரக்கங்களை நினைவுகூர என்ன அடையாளங் கள் ஏற்படுத்துகிறோம்? நாம் செல்லும் அவாந்தர வழியில் ஆண் டவரைத் தரிசிக்கிறோமா?

யாக்கோபு தன் இக்கட்டில் தேவசமுகத்தைக் கண்டு தேறுத லடைந்து தான் கையிட்டுச் செய்த சகல காரியத்திலும் எந்த இடை யூறு நேரிட்டபோதிலும் தப்பிக் கடந்து தேவாசீர்வாதம் பெற்றான். நாம் யாக்கோபைப்போல் தேவசமுகத்தைக் காண்பதெப்படி? தேவ ஒத்தாசையையும் பிரசன்னத்தையும் நமக்குக் கொண்டுவரும் ஏணி என்ன? 'நானே வழி' என்று சொன்ன இயேசுகிறிஸ்து ஒரு வரே பிதாவின் சமுகத்துக்கு நம்மை நடத்தவும் பரலோக ஆசீர்வா தங்களை நமக்குக் கொண்டுவரவும் வழியான ஏணியாயிருக்கிறார். அவர், கீழ்ப்படிதல் தாழ்மை என்ற படிகள் வழியாய் நம்மண்டை இறங்கிவந்தார். நாம் பிதாவண்டை ஏறும் ஏணியின் அஸ்திபாரக் கால்கள் அவரே. ஏணியின் பற்பல படிகளாகிய பாவ உணர்ச்சி, பாவ அறிக்கை, கீழ்ப்படிதல், விசுவாசம், நம்பிக்கை, அன்பு, ஓயா ஸ்துதி என்பவைகள் ஏணியின் ஊன்றுகால்கள்போன்ற கிறிஸ்து வால் ஸ்திரமாய்ச் சேர்க்கப்படுகின்றன. கிறிஸ்துவைச் சாராவிட் டால், இப்படிகள் பிரயோஜனமின்றிக் கழன்று விழுந்துபோகும். இப்படிகளில் ஏறும்போது கிறிஸ்துவாகிய அஸ்திபார ஊன்று கால்களை பலமாய்ப் பிடித்து ஏறவேண்டும். இயேசுவானவரு டைய உதவியால் இப்படிகளில் ஏறினவர்கள் பிதாவின் சமுகத்தில் களிப்பார்கள். தேவனுடைய நித்திய பிரசன்னம் இவர்களுக்குக் கிடைக்கும். சகல சத்துருக்களின் உபாயத்திற்கும் அஞ்சாமல் தேவாசீர்வாதம் பெற்று வாழ்வார்கள். நம்மில் எத்தனைபேருக்கு இவ்வித தேவ சமுகானந்தமுண்டு?

MATHEMATICAL PUZZLES

கணக்கு விடுகதைக் கேள்விகள்

1. நூறு என்ற லக்கத்தை எந்த நாலு பாகங்களாகப் பிரித்தால், முதல் பாகத்தோடு நாலைக் கூட்டினதும், இரண்டாம் பாகத்திலிருந்து நாலைக் கழித்ததும், மூன்றும் பாகத்தை நாலால் பெருக்கினதும், நாலாம் பாகத்தை நாலால் வகுத்ததும் சமமாயிருக்கும்?

2. 12 வித்துக்களை வரிசை யொன்றுக்கு நான்கு வித்துக்களாக 6 நேர்வரிசைகளில் எப்படி நடலாம்?

3. 19 வித்துக்களை 9 நேர்வரிசைகளில் வரிசை ஒன்றுக்கு 5 வித்துக்களிருக்கத்தக்கதாய் எப்படி நடலாம்?

4. ஒரு கூண்டில் 375 தலைகளும் 1000 கால்களும் பார்க்கக் கூடுமானல் அதிலுள்ள மிருகங்கள் எத்தனை, பட்சிகள் எத்தனை?

5. வீரன், இராமன் இப்போதிருக்கிற வயதுள்ளவனுயிருக்கையில், வீரன் வயது இராமன் வயதின் இரண்டு மடங்காயிருந்தது. இப்போது இராமன் வயது 12 ஆனல் வீரன் வயதென்ன?

LOUISE SCHEPPLER, A FAITHFUL SERVANT

லூயிஸ் ஷெப்லர் என்னும் உண்மையுள்ள வேலைக்காரியின் சரித்திரம்

லூயிஸ் என்பவள் 1763 ௵ பிரான்சுதேசத்தில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவள். அவள் சிறு பிள்ளையாயிருக்கும்போதே ஒரு சிறு தாயைப்போல் மற்ற சிறுவர்களுக்கு ஆலோசனை சொல்லியும், அவர்கள் கஷ்டத்தில் உதவிபுரிந்தும் வருவாள். இவள் குணத்தையறிந்த அந்த ஊர் போதகர் அம்மாள் (Mrs. Oberlin) இவள் 15 வயதாயிருக்கும்போதே இவளைத் தன் பிள்ளைகளுக்கு ஆயாளாக வைத்துக்கொண்டாள். 5 வருஷங்களுக்குப்பின் ஒபர்லின் அம்மாள் 7 பிள்ளைகளை விட்டுவிட்டு இறந்துபோனுள். கடைசிப்பிள்ளை 10 மாசக்குழந்தை, ஒபர்லின் ஐயர் பின்பு மறு கலியாணம் செய்யவில்லை. லூயிஸ்தான் இவர் பிள்ளைகளைப் பட்சமாய் நடத்திவந்தாள். இவள் வீட்டுக் காரியங்களை நடத்தினது மாத்திரமல்ல, சமயம் கிடைக்கும்போது சுற்றுப்பாகங்களில் போய் பிள்ளைகள் படிப்புக்காக வேலை செய்வாள். இதுவரை பெண்

பிள்ளைகள் படிப்புவிஷயத்தைக்குறித்து ஒருவரும் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. ஓபர்லின் ஐயர் சில பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து, அதில் வாசிப்பு, தையல் முதலியவை கற்பிக்கும்படி ஒழுங்கு செய்தார். ஐயர் வீட்டுவேலை செய்வதோடுகூட லூயிஸ் இப்பள்ளிக்கூடங்களிலும் சந்தோஷமாய் வேலை செய்துவருவாள். பெற்றோர் வயலுக்கு வேலைக்குப் போயிருக்கும் சமயத்தில், ஏழைப்பிள்ளைகள் இங்கு சம்பளமின்றி படித்து வந்தார்கள். சிறு குழந்தைகளுக்குப் படங்கள் காட்டி விளையாட்டு சொல்லிக்கொடுப்பாள். சற்று பெரிய பிள்ளைகளுக்கு தைக்கவும், நூற்கவும் கற்றுக்கொடுப்பாள், இதற்குப் பின் அவர்களுக்கு பலகதைகளும், பாட்டுகளும் சொல்லிக் கொடுப்பாள். சிறுவர்களின் நண்பனான கிறிஸ்துவைப்பற்றி இவளைவிட நன்றாய் சிறுவர்களுக்குக் கற்பிக்கக்கூடியவர்களைக் காண்பதரிது.

பள்ளிக்கூடம் முடிந்தபின் சாயந்தரத்தில், லூயிஸ் ஐயர் வீட்டு வேலையை வெகு சாமர்த்தியமாய் செய்துவருவாள். ஓபர்லின் ஐயர் குடும்ப கவலையின்றி, தன் ஊழியத்தைச் சந்தோஷமாய் சரிவர செய்துவந்தார்.

ஓபர்லின் ஐயர் தன் கைகளினாலேயே வேலைசெய்வதால் தன் ஜனங்களுக்கு சுறுசுறுப்பைக் கற்பித்தார். அவர்களோடு சேர்ந்து வயல் உழுதல், ரஸ்தாபோடுதல், வாராவதி கட்டல் முதலிய வேலைகளைச் செய்துவந்தார். சில வாலிபருக்குப் பணம்கொடுத்து பட்டணங்களில் போய் பல தொழில்கள் கற்றுவரும்படி அனுப்பி இவர்கள் மூலமாய் தன் கிராமத்தாருக்கு உதவிசெய்தார். வியாதியஸ்தருக்குப் பணமின்றி மருந்துகொடுத்து வந்தார். நர்ஸ் (Nurses) மாருக்கு வேலை கற்பித்து அவர்களைச் சுற்றுகிராமங்களுக்கு அனுப்புவார். இவர் வீட்டில் ஏழைகளும், சந்தோஷமற்றவர்களும் வந்து நல்ல உதவிபெற்று சந்தோஷத்துடன் போவதுண்டு. ஓபர்லின் ஐயர் 59 வருஷம் வேலைசெய்து வந்தார். இவரோடு 48 வருஷம் லூயிஸும் நல்லவேலை செய்தாள். அவருடைய கவலையிலும் கஷ்டத்திலும் சந்தோஷத்துடன் பங்குபெற்று வந்தாள். அநேக நல்ல வேலைகள் இவளால் நடந்தேறின. ஓபர்லின் ஐயர் அனுப்பும் இடங்களுக்கெல்லாம் ஒரு சமாதான தூதனைப்போல் சென்று வியாதியஸ்தருக்கும் எளியவர்களுக்கும் உடுப்பு, சாப்பாடு, மருந்து முதலியவை கொடுத்து நல்லுதவிசெய்து வந்தாள். எல்லாரும் அவளை ஆவலுடன் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார்கள். அவள் செய்யும் வேலைக்குப் பிரதி உபகாரம் ஒருக்காலும் பெற்றுக்கொள்வதில்லை. ஐயர் அம்மாள் இறந்தபின் துரையிடம்கூட சம்பளம் வாங்க விரும்பமாட்டாள். அவர் அநேகந்தரம் கட்டாயப்படுத்தி

அவளுக்கு சம்பளத்தைக் கொடுப்பதுண்டு. இது அவளுக்கு விசனம். இதைக்குறித்து ஒருதரம் அவள் எழுதுகிறதாவது :—

மிகவும் கனம்பொருந்திய ஐயாவுக்கு,

அநேக காலமாய் நான் விரும்பிய ஒரு காரியத்தை இப்போது வருஷத்தில் தங்களிடம் கேட்கப் போகிறேன். அதாவது என் தகப்பன் வைத்துப்போன கடன் இன்று முதல் தீர்ந்துபோகிறது. இது முதற்கொண்டு என்னை தங்கள் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளுங்கள். இனி எனக்கு சம்பளம் கொடுக்கவேண்டாம். தாங்கள் எல்லா விஷயத்திலும் என்னை தங்கள் குமாரத்தியைப்போல் நடத்தி வருகிறீர்கள், இது விஷயத்திலும் அப்படியே செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன். என் உடுப்புக்கும், மேல்ஜோடு, பாதரட்சைக்கும் கொஞ்சம் பணந்தான் செல்லும். இவை தேவையானபோது பிள்ளையைப்போல், தங்களிடம் வந்து கேட்பேன். என் அருமை ஐயா, இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு, என்னைத் தங்கள் பிள்ளையைப் போல் நடத்தக் கோருகிறேன்—லூயிஸ்.

இதுமுதல் ஒபர்லின் ஐயர் லூயிஸைத் தன்சொந்த பிள்ளைகளைப் போல் நடத்திவந்தார். பிள்ளைகளும் அவளை தங்கள் மூத்த சகோதரி போல் எண்ணி மதித்தும், நேசித்தும் வந்தார்கள். லூயிஸ் இக்குடும்பத்தின் சந்தோஷத்திலும், சஞ்சலத்திலும் பங்குபெற்று வந்தாள். சிலகாலம் சென்று ஒபர்லின் ஐயர் இறந்துபோனார். லூயிஸ் தன் தகப்பன் இறந்துவிட்டதுபோல் நினைத்து சத்தமாய் அழுது விசனப்பட்டாள். ஒபர்லின் என்பவர் இந்த உண்மையுள்ள வேலைக்காரி இக்குடும்பத்துக்கு ஒரு விலைமதியா பொக்கிஷம்போலிருந்ததைக்கண்டு, பின் வருமாறு ஒரு கடிதம் எழுதி, அதைத் தான் மரித்த பின் வாசிக்கும்படி, பிள்ளைகளுக்குக் கட்டளையிட்டிருந்தார். அக்கடிதத்தின் விபரமாவது :—

என் அருமைப் பிள்ளைகளே,

நான் உங்களை விட்டுப் பிரிந்துபோனாலும உங்களுக்கு ஆறுதலும், உதவியுமாயிருக்கும்படி உங்களை வளர்த்துவந்த வேலைக்காரியை உங்களிடம் ஒப்புவிக்கிறேன். இவள் 15 வயதாயிருக்கும் போதே உங்கள் தாயார் இவளை வேலைக்கு அமர்த்தினார்கள். பல விதத்திலும் இவள் நமக்கு உதவிசெய்து வந்தாள். உங்கள் அருமைத் தாயார் இறந்தபின் இவள் உண்மையுள்ள ஆயாளாகவும், கவலையுள்ள தாயாகவும், சுறுசுறுப்புள்ள உபாத்தினியாகவும் உங்களுக்குப் பேர் உதவிபுரிந்து வந்தாள். இதுவுமன்றி ஓர் அப்போஸ்தலனைப் போல் நான் அனுப்பிய இடங்களுக்கெல்லாம் சென்று சிறுபிள்ளை

களுக்கு இனிமையான பாட்டுகளையும், ஜெபத்தையும், வேதசத்தியத்தையும் புகட்டி வந்தாள். பலவித கஷ்டம் நேரிட்டபோதிலும் மனம் சோராமல் வேலைசெய்தாள். முரட்டாட்டகுணமுள்ள பிள்ளைகள் மத்தியில் வேலைசெய்வது லேசான காரியமல்ல. கரடுமுரடான பாதைகளில் பனியிலும், மழையிலும் நடந்து இவர்களுக்கு உதவிசெய்ய நேரிட்டபோதிலும் மலர்ந்த முகத்தோடு கஷ்டத்தை எள்ளளவும் நோக்காமல் உற்சாகமாய்த் தன் வேலையைச் செய்துவந்தாள். சாயந்திரங்களில் களைத்து வந்து பின்பு என் குடும்பகாரியங்களையும் கவனித்து வந்தாள். என் வேலைக்கும், ஆண்டவர் வேலைக்கும் தன் நேரத்தையும், தன் தாலந்தையுமாத்திரமல்ல, தன் சுகத்தையும், பலத்தையும் ஒப்புக்கொடுத்தாள். இப்போது அவள் திரேகம் அதிகப் பெலயீனப்பட்டிருக்கிறது. அவளுக்கு நான் நல்ல சம்பளம் கொடுத்ததால் இப்படி யெல்லாம் செய்தாள் என்று நீங்கள் ஒருவேளை சொல்லுவீர்கள். அப்படியல்ல, உங்கள் தாயார் இறந்த பின் இவள் சம்பளம் வாங்குகிறதில்லை. நீங்களாவது, நானுவது வியாதிப்பட்டிருக்கையில் எத்தனைநாளோ இராக்கண் விழித்து நமக்காகக் கவலைப்பட்டிருந்தாள். ஆகையால் இவளுக்கு நாம் அதிகக் கடமைப்பட்டிருக்கிறோம். இவளை வயதுசென்ற காலத்தில் ஒவ்வொரு பிள்ளையும் தன்னால் இயன்றவளவு பராமரித்து, மதித்து வருவீர்களென்று நம்புகிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

உங்கள் அருமைதகப்பன்.

ஒபர்லின் ஐயருடைய பிள்ளைகள் லூயிஸை தங்கள் தகப்பனுர் விருப்பத்தின்படியே மிகவும் பட்சமாய் நடத்திவந்தது மன்றி, அவர் தங்களுக்கு வைத்துப்போன சொற்ப ஆஸ்தியில் அவளுக்கும் ஒரு பாகம் பிரித்துக்கொடுத்தார்கள். ஆனுல் லூயிஸ் இதைப் பெற்றுக் கொள்ள விருப்பமற்றிருந்தாள்.

1829–ம் வருஷத்தில் லூயிஸ் செய்த நற்கிரியைகளுக்கு உலகப் பிரகாரமாக ஒரு வெகுமதி கிடைத்தது. ஒரு சம்பன்னனுக வாழ்ந்த ஒரு பிரான்சுக்கார பிரபு ஏராளமான ஆஸ்தியை வைத்து விட்டு இறந்துபோனுர். அதின் வட்டிப்பணத்தை வருஷந்தோறும் நற்குண நற்செய்கைக்கென்று கைப்பேர்போன யாருக்காவது வெகுமதியாகக் கொடுப்பது வழக்கம். இந்ததடவை அந்த வெகுமதி லூயிஸுக்குக் கிடைத்தது. சுமார் ரூ 250 இருக்கும். லூயிஸ் அதை நன்றியோடு பெற்றுக்கொண்டு கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினுள். இப்பணத்தை வட்டியும் முதலுமாக பரோபகார வேலைக்கென்றே செலவழித்தாள். இவள் மரிக்குமுன் மீதியான பணத்தைக் கிறிஸ்துவின் இராஜ்ஜியம் பரவுவதற்கேதுவான கட்டடங்கள் கட்டுவிப்பதற்

காகக் கொடுத்துவிட்டாள். இதில் அநாதப்பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது.

லூயிஸ் அதிக பெலயீனமாயிருந்தபோதிலும், இன்னும் தையல் பள்ளிக்கூடங்களை மேல்பார்த்துவந்தாள். மற்றப் பள்ளிக்கூடங்களுக்கு உபாத்திமாரை ஏற்படுத்தினாள். தர்மகாரியங்களில் கடைசிவரை அவள் தளர்ச்சி யடையவில்லை. அவள் மரிப்பதற்கு 5 நாட்களுக்குமுன்தான் தன் சுறுசுறுப்பு ஓய்ந்தது. மரணத்தை சந்திக்க சற்றேனும் அஞ்சாமலிருந்தாள். 1837ம் ௵ ஜூலை ௴ 25-ம் தேதி 74 வயதுள்ளவளாக லூயிஸ் கர்த்தருக்குள் நித்திரை யடைந்தாள். அவள் ஊராரெல்லாரும் தங்கள் அருமைத்தாயை இழந்தது போல் மிகவும் துக்கமுற்றிருந்தார்கள். அவள் விருப்பத்தின்படியே தன் ஆயுசுகாலமெல்லாம் உண்மையாக தொண்டுசெய்துவந்த ஓபர்லின் ஐயர் பக்கத்தில் அவள் சரீரம் அடக்கம் பண்ணப்பட்டது.

> உன்னால் இயன்ற நன்மையை
> எல்லா விதத்தாலும், எல்லா வழியாலும்,
> எல்லா இடங்களிலும், எல்லா நேரத்திலும்,
> எல்லா மனிதருக்கும், எக்காலத்திலும் செய்.

THE WAR NEWS

யுத்த சமாசாரம்

மேல் பக்கத்துச்சண்டை.

கடந்த மாதத்தின் ஜெர்மானியரின் சேனை அதிகமாக முன்னேறிச் சென்றுவிட்டதென்று சொல்ல இடமில்லை. வெகு மும்முரமாக பிரிட்டிஷ்படைகளையும், பிரெஞ்சு படைகளையும் பிரிக்க எத்தனித்தது சித்திபெறவில்லை. இருதேசப் படைகளுக்கும் வாக் (Foch) என்பவர் தளகர்த்தனாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். நம்முடைய முதல் மந்திரியாகிய லாயிட் ஜார்ஜ் என்பவர் சேனைகளைப் பார்த்துவரும்பொருட்டு பிரான்சு தேசத்துக்குப் போய்வந்தார். அவர் அங்குள்ள சேனாதிபதிகளோடு கலந்து பேசி யுத்தம் அனுகூலமாக நடந்து வருவதாகச் சொல்லுகிறார். அநேக சிறுசண்டைகளில் நம்முடைய சேனையர் விட்டுவந்த இடங்களிற் சிலவற்றை மீட்டிருக்கின்றனர். கைதிகளாகச் சிலரையும் பிடித்திருக்கின்றனர். அமெரிக்காவின் சேனைகள் யுத்தத்தில் பங்குபெற்று வருகின்றன. மே மாதம் முழுவதும், அவர்களுடைய சேனைகள் அட்லான்

டிக் மகா சமுத்திரத்தைத் தாண்டி வகுப்பு வகுப்பாகக் கொண்டுவரப் படும். ஹின்டன்பர்க் என்னும் ஜெர்மானிய தளகர்த்தர் மேல்பாகச் சண்டையைப்பற்றி நிச்சயமாயிராததினால் சுகவீனத்தைச் சாக்கிட்டு சண்டையில் பங்கு பெறவில்லை. மறுபடியும் சத்துரு மும்முரத்தோடு சண்டை செய்வானென்றாலும் நம்முடைய சேனைகளை முறியடித்துப்போடுவானென்று எண்ண நிமித்தமில்லை.

ருஷியா.

ருஷியாவில் உட்கலகம் நிவிர்த்தியாகவில்லை. ஜெர்மானிய படைகள் சிலவிடங்களைத் தாக்குகிறதாகத் தெரியவருகிறது. அதினிமித்தம் சிலர் சத்துருவை எதிர்க்கப் பிரயாசப்பட்டுவந்தார்கள். அங்குகிடைக்குந் தானியங்களெல்லாம் ஜெர்மனிக்கு அனுப்பப் படுகிறது.

பலஸ்தீனா.

பலஸ்தீனாவில் கிடைத்தஜெயம் அதிகரிக்கிறது. நம்முடைய சேனைகள் யோர்தான் நதிக்குக் கிழக்கிலும் முன்னேறிச் சென்றிருக்கின்றன. அங்கு யாத்திரை செய்பவர்களுக்குக் கஷ்டமிராததினால் எப்போதும்போல முக்கிய உற்சவங்கள் நடந்து வருகின்றன.

இந்தியா.

நம்முடைய பிரதம மந்திரி பணத்துக்காகவும், சேனைகளுக்காகவும் கேட்டிருக்கிறபடியால் முக்கிய ஆலோசனைச் சங்கங்கள் இந்தியாவின் பலபாகங்களிலுங்கூடி யுத்தத்தைக்கொண்டு செலுத்தவேண்டிய முறைகளைத் தீர்மானிக்கின்றனர். யுத்தக்கடனுக்காகக் கேட்பார்கள் போலும். பணமுள்ளவர்களெல்லாம் கடன்கொடுத்தால் உதவியாயிருக்கும்.

கடற்சண்டை.

கடந்த மாதத்தில் நம்முடைய கடற்சேனைகள் (Zeebrugge) சீபுரிச் என்னும் பெல்ஜியன் துறைமுகப்பட்டணத்தைத் தாக்கினது முக்கிய விசேஷம். அங்கு சிலர் இறங்கி அதிக நஷ்டத்தை உண்டு பண்ணியிருக்கின்றனர். துறைமுகம் கடலுக்கடியில் வைக்கப்பட்டிருக்கும் குண்டுகளால் (Mines) காக்கப்பட்டிருந்தபடியால் அங்குசென்றது வியக்கத்தக்க ஒரு செயல். கடந்த மாதத்தில் சப்மரீனால் அமிழ்த்தப்பட்ட கப்பல்களின் தொகை குறைந்திருக்கிறது. பிடிக்கப்பட்ட சப்மரீன்களின் தொகையோ அதிகரித்திருக்கிறது.

HOW TO LIVE A GOOD LIFE

உத்தம ஜீவியம் செய்ய விரும்புவோர்க்கு சில புத்திமதிகள்

'தேவனோடு பழகி அவரோடு சமாதானமாயிரு' என்று சத்திய வேதத்திலுரைக்கப்பட்ட வசனமே பெருந்தன்மையான ஜீவியம் செய்ய விரும்புவோர் கவனிக்கவேண்டிய முக்கிய காரியம். ஞானமும், பட்சமுமுள்ள தன் தகப்பனால் எப்போதும் நடத்தப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருவது ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் பெரிய பாக்கியம். தேவன் நமது பரம தகப்பன். மிகவும் அன்பும் ஞானமுமுள்ள உலகத் தகப்பனைவிட அதிகமான நன்மைகளைச் செய்யவல்லவர். அவர் நமக்கு ஜீவன் அளித்திருக்கிறார். அவர் நமக்கு சுகத்தைக் கொடுத்து, நாம் அநுபவிக்கும் எல்லாவித சந்தோஷங்களையும் கடாட்சித்திருக்கிறார். நாம் தகுந்தபடி அவரை நேசித்து, அவருக்கு ஊழியஞ்செய்து வருகிறோமா? இல்லையே. அநேகந்தரம் அவருக்குக் கீழ்ப்படியாமல் முரட்டாட்டமுள்ள பிள்ளைகளாய் நடந்து, அவரை மறந்து, நம் சுயவிருப்பங்களின்படியெல்லாம் செய்திருக்கிறோம். ஆகையால், துக்கத்துடன் பாவ அறிக்கை செய்து, பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதுதான் நம்மேல் விழுந்த முதல்கடமை. கெட்டகுமாரன் சொன்னதுபோல் 'தகப்பனே! உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன், உம்முடைய குமாரன் என்று அழைக்கப்பட நான் பாத்திரன் அல்ல' என்று நாமும் சொல்வோமாக.

தேவன் நமது தகப்பனாய் மாத்திரமல்ல, நம்முடைய ராஜனுமாயிருக்கிறார். நாம் அவருடைய கற்பனைகளை மீறி அவரை விசனப்படுத்தியிருக்கிறோம். நமக்குப் பாவ மன்னிப்பை அளிக்கும்படி இயேசுகிறிஸ்து நமக்காக மனிதனாய்ப் பிறந்து, நம்மேல் விழவேண்டிய தண்டனையை அவர் அடைந்தார். நாம் செய்யும் நற்கிரியைகள் நம்மை மோட்சம் சேர்க்கமாட்டாது. ஏனென்றால், எப்பேர்ப்பட்ட நல்ல செய்கையிலும் பாவம் கலந்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.

நாம் பாவ மன்னிப்படைந்து தேவனோடு சமாதானமாயிருப்பது மாத்திரம் போதாது. நம்முடைய இருதயங்கள் சுத்திகரிக்கப்படவேண்டும். இதைச்செய்ய வல்லவர் நமது பரமபிதாவினால் அருளப்பட்ட பரிசுத்த ஆவியானவரே. வைத்தியன் மருந்துகளைப்

பிரயோகப்படுத்துகிறான். பரிசுத்த ஆவியானவர் பாவ வியாதியைத் தீர்க்கத்தக்க காரியங்களை நமக்கு தெரியப்படுத்துகிறார். அவற்றில் சிலவற்றை இங்கு எடுத்துரைப்போம்:—

முதலாவது ஜெபம்: முற்காலத்தில் நல்ல மனிதன் ஒருவன் தேவனோடு சஞ்சரித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் எப்போதும் நமக்குச் சமீபமாய் இருக்கிறார் என்பதை நாம் மறக்கலாகாது. கரடுமுரடான பாதையில் நடக்கும் சிறுபிள்ளைகளைப்போல் நாம் அடிக்கடி இடறி விழுகிறோம். ஜெபத்தின் மூலமாய் நாம் தேவனாகிய பரம பிதாவின் கையைப் பிடித்துக்கொள்ளுகிறோம். ஒவ்வொருநாள் காலையிலும், கடந்த இரவில் பெற்றுக்கொண்ட கிருபைகளுக்காக ஸ்தோத்திரம் செலுத்தி, பகல் முழுவதும் நம்மை நடத்தும்படியாக ஆண்டவரிடம் கேட்கவேண்டும். அப்படியே மாலையிலும் பகலில் செய்த பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பை பெற்றுக்கொள்ளவேண்டும். சோதனை நேரிடும்போதெல்லாம் நமது இருதயத்தை தேவனிடம் ஜெபத்தின் மூலமாய் உயர்த்தவேண்டும்.

இரண்டாவது வேத வாசிப்பு: வேத புஸ்தகமானது நமது பாதைக்குத் தீபமாயிருக்கிறது. இது நம்மை சுத்திகரிக்கும் கருவியாயிருக்கிறது. 'உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்' என்று இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷரைக்குறித்து ஜெபம் பண்ணினார். வேத புஸ்தகத்தை தினந்தோறும் வாசித்து, அதினால் நமது நடக்கையை சீர்திருத்தவேண்டும். இத்துடன் ஒரு நல்ல பாட்டுப்புஸ்தகத்தையும் பிரயோகித்தல் நல்லது. இதை வாசிப்பதுமாத்திரமல்ல, இதிலிருந்து சில வசனங்களை மனப்பாடம் செய்யவேண்டும்.

மூன்றாவது சபை ஆராதனை: பரிசுத்தமாகக் கழிக்கும்படி தேவன் ஏழுநாட்களில் ஒரு நாளை ஏற்படுத்தியிருக்கிறார். அந்நாளிலே கடந்தவாரத்தில் நம்முடைய நடக்கை எப்படியிருந்ததென்று ஆராய்ந்து பார்க்கவும், வேதத்தை வாசித்து தியானிக்கவும், தேவனுடைய வீட்டில் அவரைத் தொழுதுகொள்ளவும் நமது நேரத்தைச் செலவழிக்கவேண்டும்.

நான்காவது பாவத்தில் விழாதபடி விழிப்பு: 'சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்' என்று சத்திய வேதம் கூறுகிறது. நம்மால் இயன்றவளவு நம்மை தீமைக்குட்படுத்தக்கூடிய காரியங்களை விட்டு விலகவேண்டும். முக்கியமாக சன்மார்க்கமற்ற தோழரைச் சாரலாகாது. அப்படியே துன்மார்க்க புஸ்தகங்களையும் பிரயோகிக்கலாகாது.

ஐந்தாவது தற்பரிசோதனை: பித்தாகோரஸ் என்னும் ஒரு கிரேக்க தத்துவ சாஸ்திரி நாம் படுக்கைக்குப் போகுமுன் ஒவ்வொரு நாளும் தற்பரிசோதனை செய்யவேண்டும் என்கிருர். தினந்தோறும் அல்லது வாரத்தில் ஒருதரமாவது ஒரு நேரத்தைக் குறித்து தேவனோடு தனித்திருத்தல் நல்லது. நல்ல புஸ்தகம் வாசித்து, தியானம் செய்தல் தற்பரிசோதனைக்கு ஏதுவாகி பரிசுத்த ஜீவியத்தை விர்த்தியாக்கும். வைத்தியனால் கொடுக்கப்பட்ட மருந்தைச் சாப்பிடாமல் அவன் சொற்கேளாத வியாதியஸ்தன் குணமடைவது கஷ்டம். அப்படியே பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படியாதவனுடைய பாவ வியாதியும் நிவிர்த்தியாகமாட்டாது.

'பரம பிதாவே! உம்முடைய சத்தியத்தில் என்னை நடத்தவும், என் இருதயத்தைச் சுத்திகரிக்கவும், என்னை உம்மைப்போலாக்கவும், உம்முடைய பரிசுத்த ஆவியை எனக்குத் தந்தருளும்,' என்று ஊக்கமாய் ஜெபிப்போமாக.

S. S. P.

THE KEEPING OF THE SABBATH

ஓய்வுநாள் ஆசரிப்பு

'தேவன் ஏழாம்நாளை ஆசீர்வதித்தார்.' ஆதியாகமம், 2: 3.

ஏதேனில் தேவன் இரண்டு நியமங்களை மனிதனுக்கென்று ஏற்படுத்தினர். ஓய்வுநாள், விவாகம். இவைகளில் ஓய்வுநாள் ஆசரிப்பே முந்தினது. பாவம் வருமுன் ஏற்படுத்தப்பட்ட இந்த முதலாம் நியமம் நித்திய நியமமாகவே இருக்கவேண்டும். ஓய்வுநாள் ஆசரிப்பைப்பற்றி வேதத்தில் வரும் சில முக்கிய குறிப்புகளை இங்கே காண்பிப்போம்.

1. **ஏதேனில் ஏற்படுத்தப்பட்ட நோக்கம்.** 'ஆறு நாளைக்குள்ளே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார்' (யாத். 31: 17). தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் நல்லதென்று கண்டார். கர்த்தர் தமது கிரியைகளில் மகிழுகிருர் என்றும் மனுஷகுமாரன் அநாதிகாலமுதல் மனுமக்களில் மகிழ்ச்சியடைந்தார் என்றும் வேதம்கூறுகிறது. தமது சிருஷ்டிகளில் மகிழுகிற சுவாமி, தமது சாயலின்படி உண்டான மனிதனில் மிகுதியாய் மகிழுகிருர். கர்த்தர் தமது ஜனங்களைப்பார்த்துப் பூரிக்கவும், கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் தேவனைப்பார்த்துப்

பூரிக்கவும் அவசியமென்று ஒய்வுநாள் ஏற்படுத்தப்பட்டது. ஓய்வு நாளை மனமகிழ்ச்சியின் நாளென்று எண்ணி, கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருக்கும்படி ஏசாயா போதிக்கிறார் (58: 13). இது ஏதேனில் தான் மகா பெரிய அவசியம். ஏதேனின் நிலைமைக்கு நெருங்கி வருகிற மனிதன் இம்மையிலே ஒய்வுநாளின் ஆசரிப்பை அதிக முக்கியமாய் எண்ணுவான். கர்த்தரில் மகிழ்ந்து பூரிக்க வாரத்தில் ஒரு நாள் மகா சொற்பம் என்றெண்ணி அவன் வாரத்தின் மற்றநாட்களையும் ஒய்வுநாளைப்போலாக்கும்படிப் பார்ப்பான்.

2. **சீனாய்மலைக் கட்டளை.** ‘ஒய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக’ (யாத். 20: 8). பாவம் வருமுன் தேவன்தாமே ஒய்வுநாளை ஆசரித்து மாதிரிகாண்பித்தார். பாவம் வந்தபின் கட்டளை அவசியமாகிவிட்டது. கட்டளை இஷ்டத்தை அகற்றி, கட்டாயத்தை வருவிக்கிறது. பாவி தனக்கு நன்மையானது இன்னதென்று அறியமாட்டான். அறிந்தாலும் தானாய் அதைக் கைக்கொள்ளமாட்டான். ஆதலால் கட்டளை அவசியம். கட்டளை வந்தபின்பு, மீறுதல் குற்றமாகி, தண்டனையை வருவிக்கும். பத்துக்கற்பனைகளில் ஒன்றாக இதை அமைப்பது அவசியமென்று கண்ட ஆண்டவர் பின்னான காலத்தில் இந்த ஒன்றைமாத்திரம் அகற்றிப்போட்டார் என்று சொல்ல வேதத்தில் ரூபகாரம் இல்லை. இந்த ஒரு கற்பனைக்குமட்டும் ‘நினைப்பாயாக’ என்ற வார்த்தையைக் கூட்டினவர், இதைமட்டும் மறந்துவிட இடங்கொடுப்பாரோ?

3. **ஓர் புதிய முகாந்தரம்.** ‘நீ எகிப்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணினார் என்றும் நினைப்பாயாக. ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார்’ (உபா. 5: 15). பத்துக்கற்பனைகள் இரண்டாம்முறை எழுதப்படுகிற இடத்தில், நான்காம் கற்பனையிலேயே இந்தப் புதிய முகாந்தரம் கொடுக்கப்பட்டது. சீனாய்மலையின் நான்காம் கற்பனையில் சிருஷ்டிப்பின் முகாந்தரம் காணப்படுகிறது. இங்கே எகிப்தின் அடிமைத்தன விடுதலை முகாந்தரமாகக் காட்டப்படுகிறது. இப்படியே, இந்த ஒரு கற்பனைக்குமட்டும் காலத்துக்குக்காலம் புதிதுபுதிதான நியாயம் கொடுக்கப்படுகிறது. ஆதலால் இந்தக் கற்பனைக்குமட்டும் காலம் செல்லச் செல்லப் புது பெலனும் புது அதிகாரமும் உண்டு. மேலும் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்துவந்த சரீரமீட்பினிமித்தம் ஓய்வுநாள் பரிசுத்தமாய் ஆசரிக்கப்பட அவசியமானால், கல்வாரிச் சிலுவையில் சம்பாதிக்கப்பட்ட மகத்தான ஆத்தும மீட்பினிமித்தம் ஒய்வுநாள் ஆச

ரிக்கப்பட அனந்த நியாயமுண்டல்லவா? ஒய்வுநாளுக்கு ஆண்டவரான மனுஷகுமாரன் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, தம்மாலுண்டான உலகமீட்பைப் புதுமுகாந்தரமாகக் கொடுத்தார் என்று நம்பலாமே!

4. ஓய்வுநாள் ஆசரிப்பு ஓர் அடையாளம். 'நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும். உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும். அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்' (யாத். 31: 13,14). கர்த்தருக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் உள்ள உடன்படிக்கைக்கு ஓய்வுநாள் ஆசரிப்பு வெளிப்படையான அடையாளம். கர்த்தர் அவர்களுடைய தேவன், அவர்கள் சகல ஜனங்களிலும் அவருக்குச் சொந்த சம்பத்து, ஆசாரிய ராஜ்யம், பரிசுத்த ஜாதி (யாத். 19: 5, 6). இதற்கு ஓய்வுநாள் நித்திய அடையாளம். ஆண்டவருக்கும் அவர்களுக்கும் அடையாளமான ஓய்வுநாட்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்கின பாதகத்தினிமித்தமே சுவாமி அவர்களைத் துரத்தித் தள்ளிப்போட்டதாக எசேக்கியேல் தீர்க்கதரிசி பலமுறை சொல்லுகிறார் (20. அதி). தேவனுக்கும் யூதசபைக்கும் இருந்த ஐக்கியத்தைவிட, இயேசு இராஜாவுக்கும் அவர் திருச்சபைக்கும் மகா உறுதியும் நிலையுமான அன்னியோன்னிய நித்திய ஐக்கியம் உண்டு. இந்த ஐக்கியத்தின் நியமமான நித்திய அடையாளமாக ஓய்வுநாள் இக்காலத்தில் ஆசரிக்கப்பட அனந்த நியாயமுண்டல்லவோ!

5. கர்த்தராகிய இயேசுவின் அதிகாரம். 1–வது, அவர் ஓய்வுநாளை ஆசரித்து மாதிரிகாட்டினார். 'அவர் தமது வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்துக்குப் போனார்' (லூக். 4: 16). நியாயப்பிரமாணத்தை அழிக்கிறதற்கல்ல, நிறைவேற்றுகிறதற்கே அவர் வந்தார். 2–வது, அவர் ஓய்வுநாளை வேலைநாளாக்க அதிகாரங் கொடுக்கவில்லை. ஆசாரியர்கள் ஓய்வுநாளில் ஓய்ந்திராமல், ஓய்வுநாளை வேலைநாளாக்கினாலும் குற்றமில்லாதிருக்கிறார்கள் என்று வேதம் சொல்லுகிறதாகச் சொல்லுகிறார் (மத். 12: 5). பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே ஊழியக்காரருக்கு ஓய்வுநாள் வேலைநாளாயிருந்தது. அதுபோலவே அவர்களுக்கும் புதிய ஏற்பாட்டின் காலத்திலும் இருக்கும் என்பதாகவே அவர் போதிக்கிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்துச் சபை ஓய்வுநாளை வேலைநாளாக்குவதற்கு இங்கே சுயாதீனம் கொடுக்கப்படவில்லை. ஊழியருக்கும் சபைக்கும் பழைய ஏற்பாட்டு முறையையே அவர் உறுதிப்படுத்துகிறார். 3–வது, மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள்

மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது என்று அவர் போதிக்கிறார் (மாற். 3: 27). இயேசுவின் காலத்தில் யூதர்கள் ஓய்வுநாளில் போஜனம் புசியாதிருப்பது மாத்திரமல்ல, உமிழ்நீர் முதலாய் விழுங்கப்படாது என்பார்கள். இதைப்போல் மகா அற்பமான எண்ணிறந்த கட்டளைகளை அவர்கள் அக்காலத்தில் கைக்கொண்டார்கள். இப்படிச் செய்வது, ஒய்வுநாளுக்காக மனுஷன் உண்டாக்கப்பட்டது போல், அவன் அதற்கு அடிமைப்பட்டதற்குச் சமமாகும். ஒய்வுநாள் மனுஷனுடைய பிரயோஜனத்துக்கேதுவாக ஆசரிக்கப்படுவதே அவசியம். அப்படிச் செய்வதே மனிதனுக்கென்று ஓய்வுநாள் ஏற்படுத்தப்பட்ட ஆரம்ப நோக்கத்திற்கு இசைவாகும் என்று போதித்தார். இதினால் ஓய்வுநாளுக்கு ஆண்டவரான இயேசு சுவாமி ஓய்வுநாள் ஆசரிப்பை உறுதிபண்ணினாரே யல்லாமல் மாற்றிப்போடவில்லை. மற்றப்படி, அக்காலத்தில் யூதர்கள் ஓய்வுநாளை மகா கண்டிப்பாய் ஆசரித்திருக்க, அவ்வித ஆசரிப்பு அவசியமில்லை என்று அவர் கண்டிக்காதது ஆச்சரியமில்லையா?

6. **வாரத்தின் முதல்நாள் ஓய்வுநாளாக்கப்பட்ட ஏற்பாடு.** புதிது புதிதான முகாந்தரத்தினிமித்தம் ஒய்வுநாள் ஆசரிப்பு கட்டளை இடப்பட்டதென்று பார்த்தோம். கர்த்தராகிய இயேசுவின் மகத்துவ உயிர்த்தெழுதலின் வெற்றிச் சிறப்பினிமித்தம் வாரத்தின் முதலாம் நாள் ஓய்வுநாளாக்கப்பட்டது ஆச்சரியமல்ல. அந்நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்டது. அந்நாளில் சபை ஆவியானவரால் ஒரே சரீரமாக அபிஷேகம் பண்ணப்பட்டது. அந்நாளிலேயே அப்போஸ்தலர் காலத்துச் சபை பரிசுத்த இராப்போஜன விருந்தை ஆசரித்தது (அப். 20: 4). 'வாரத்தின் முதல்நாள்தோறும்' ஆதிச்சபை காணிக்கையைச் சேர்த்துவைத்தது (1 கொரி. 16: 2).

7. **திருச்சபை வழக்கம்.** ஆதித்திருச்சபைப் பிதாக்கள் இதைப் பற்றித் திட்டமாய்ச் சாட்சிகொடுத்திருக்கிறார்கள். பரி. யோவான் அப்போஸ்தலனின் சிஷனான இக்னேஷியஸ்: 'நாங்கள் ஓய்வுநாளையல்ல, கர்த்தருடைய நாளை ஆசரிக்கிறோம்' என்கிறார் (கி. பி. 100–ஸு) 'பர்னபா: கிறிஸ்து உயிர்த்தெழுந்த எட்டாம் நாளைச் சந்தோஷமாய் ஆசரிக்கிறோம்' என்கிறார் (2–ம் நூற். ஆரம்பம்). யுஸ்தின் மாட்டர்: 'இயேசு உயிர்த்தெழுந்த முதலாம் நாளில் ஒன்று கூடி வருகிறோம்' என்கிறார் (கி. பி. 134). அலெக்சந்திரியா கிலெமெந்து: 'பழைய ஏழாம்நாள் இப்போது வேலைநாளாயிற்று' என்கிறார் (கி. பி. 194). தெர்த்துல்லியன்: 'கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக்கிழமையில் உலகவேலைகளையும் கடமைகளையும் விட்டுவிட்டு சந்தோஷங்கொள்ளுகிறோம்' என்கிறார் (கி. பி. 200). பூர்

வீக சாட்சி இவ்வளவு தெளிவாயிருக்க, எழாம்நாளை முதலாம் நாளாகப் பாப்புகள் மாற்றினுர்களென்றும், அதை ஆசரிக்கிறவர்கள் மிருகத்தை வணங்குகிறவர்களென்றும், எழாம்நாள் அட்வெந்திஸ் தர்கள் சொல்லுவது அபத்தமாயிருக்கிறது.

8. **மகா பெரிய ஓய்வுகொண்டாடல்.** 'தேவனுடைய ஜனங் களுக்கு இளைப்பாறுகிற காலம் (Gr. மகா பெரிய ஓய்வுகொண் டாடுதல்) இனிவருகிறதாயிருக்கிறது' (எபி. 4: 9). அந்தப் பரம நித்திய ஓய்வுகொண்டாடுதலுக்கு அடையாளமும் ஆயத்தமுமாகவே இவ்வுலக ஓய்வுநாட்களை நாம் ஆசரிக்கிறோம். மறுமையில் வரப் போகிற நித்திய ஓய்வுக்கு ஒப்பாக இம்மையிலே தேவனுடைய ஜனங்களுக்கு நிலையான ஆத்தும ஓய்வும் அமைதலும் வரவேண்டு மென்று இந்த அதிகாரம் போதிக்கிறது.

'கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்' என்று பரிசுத்த யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (வெளி. 1: 10). ஓய்வு நாளை ஆசரிக்கும் விதம் இதுவே. ஓய்வுநாளில் ஆவிக்குள்ளாகும் பக்தருக்கு பரிசுத்த யோவானைப்போல் பரலோக காட்சி அளிக் கப்படும். ஓய்வுநாளில் ஆவிக்குள்ளாகி ஆண்டவரில் மகிழுகிறவர்கள் யாக்கோபின் சுதந்தரத்தால் போஷிக்கப்படுவார்கள் (எசா. 58: 14). ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படி சபைகளைச் சீர்திருத்துகிறவர்கள் நெகேமியாவைப்போல், 'என் தேவனே! இதைக் குறித்து நீர் என்னை நினைத்தருளும்' என்று ஜெபிக்கலாம் (13 : 22).

S. G. Maduram.

CHILDREN'S PAGE

THE TESTIMONY OF A LITTLE GIRL

ஓர் சிறுமியின் ஊழியம்

ஆப்பிரிக்காக்கண்டத்திலே மிஷனெரி ஊழியம் செய்துவரு கிற ஒரு துரை அக்கண்டத்தின் உள்நாட்டிலே மிஷனெரிமா வாவொட்டாத ஒரு முரட்டுஜாதியார் மனம்... ...வீதத்தைப்பற்றி எழுதியிருக்கிறார். அந்நாட்டில திமிர்வாதங்கொண்டு இரண்டு காலும் விளங்காமற்போன ஒரு சிறுபெண் இருந்தாள். அவளைக் குறித்துப் பெற்றோர் மனஞ்சலித்துப்போய் மிஷனெரிகளிருந்த அடுத்த தேசத்துக்குக் கொண்டுபோய் அவர்கள் கையில் ஒப்புக் கொடுத்துப்போட்டார்கள். அங்கே அப்பெண்ணை மிஷனெரி வைத்தியரொருவர் ஆரோக்கியப்படுத்தியதோடு அவளுக்குக் கிறிஸ்

துவின் அன்பையும் விளக்கிக்காட்டி அவளை மெய்விசுவாசியாக்கினார். பின்பு அவளைத் தன் வீடுபோய்ச் சேருவதற்கேற்ற செலவு கொடுத்து அனுப்பிவிடவே, அவள் வழிநெடுகத் தான் சந்தித்த தன் ஜாதியாரனைவருக்கும் தன் அனுபவத்தைச்சொல்லி ‘கடவுளுடைய மனிதரான மிஷனெரிமாரை நாம் முன்னே சரியானபடி நிதானியாமற்போனோம். அவர்கள் மிகவும் நல்லவர்கள். மெய்யான கடவுளை வணங்குகிறவர்கள். நமக்கும் நன்மையே செய்யவந்தவர்கள். நான் ஆறுமாதங்களுக்கு முன்னே அவர்களிடத்துக்குச் சுமந்து கொண்டுபோகப்பட்டேன். இப்பொழுதோ நடந்து திரும்பிவருகிறேன். இது அவர்கள் போதிக்கிற மெய்க்கடவுளின் மகிமையல்லவா?’ என்று பிரசங்கித்துக்கொண்டே தன் ஊருக்கு வந்துசேர்ந்தாள். அங்கேயும் தன் பெற்றோர், உற்றோர், கிராமத்தார் யாவருக்கும் இதேவகையாய்ச் சாட்சிசொன்னாள். ஜனங்களுடைய மனம் மாறிப்போயிற்று; மிஷனெரிமாரைத் தேடிப் போதனையைக் கேட்டார்கள்; குணப்பட்டார்கள். இப்படியே ஒரு சிறுமியைக்கொண்டு அங்கே கடவுள் தமது சுவிசேஷத்திற்கு வாசலைத்திறந்து தமது ராஜ்யத்தை ஸ்தாபித்தார்.

சாட்சி வல்லமையுள்ளது. சிறுவருடைய சாட்சி மிகவும் வல்லமையுள்ளது. சிறுவர்களே நீங்கள் கர்த்தரை அறிந்திருக்கிறீர்களா? அவர் உங்கள் பிதாவும் இரட்சகரும் வழிகாட்டியும் நேசருமாயிருக்கிறாரென்ற நிச்சயம் உங்களுக்குண்டா? உங்கள் அனுபவத்தைப் பிறருக்கும் சொல்லுங்கள். அதினால் எவ்வளவு நன்மை வரக்கூடுமென்று யார் அறிவான்?

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-வரு ஜூன்மீ

1 ச.	1 இரா.	7.	40—51	11 செ	1 இரா.	12	16—30	21 வெ	1 இரா.	19.	1—8
2 ஞா.	„	8	1—13	12 பு	„	13	1—10	22 ச	„	19	9—21
3 தி.		8	14—30	13 வி	„	13	1—22	23 ஞா.	„	20	1—18
4 செ.	„	8	54—[illegible]	[illegible]	„	13	23—34	24 தி	„	20	19—30
5 பு	„	9	1—9	15 ச.	„	16	[illegible]	25 செ.	„	20	31—43
6 வி.	„	10.	1—13	16 ஞா	„	17.	1—16	26 பு	„	21	1—19
7 வெ	„	10	14—29	17 தி.	„	17.	17—24	27 வி.	„	22.	1—14
8 ச.	„	11.	4—14	18 செ	„	18	1—16	28 வெ.	„	22	15—28
9 ஞா.	„	11.	26—40	19 பு.	„	18	17—29	29 ச	„	22.	29—40
10 தி.	„	12.	1—15	20 வி.	„	18.	30—46	30 ஞா.	சங்.	72.	1—20

C. L. S. PRESS, MADRAS—1918